ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2183/48 - 2020 ජූලි මස 10 වැනි සිකුරාදා - 2020.07.10

*2183/48 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

### ஊவா மாகாண மாகாண சபை

*ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்படும் நியமனங்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தின் 154இ. மற்றும் 154ஊ. என்னும் உறுப்புரைகளின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், ஊவா மாகாண ஆளுநர் உயர் சட்டத்தரணி ராஜா கொல்லுரே ஆகிய நான், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்களைச் செய்துள்ளேன் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.*

1. *ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2001 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஊவா மாகாண வீதி பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபை நியதிச் சட்டத்தின் 6 (இ) (1) ஆம் பிரிவின் பிரகாரம், ஊவா மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், சுற்றுலாத்துறை, போக்குவரத்து, கலாசாரம் மற்றும் நெசவுக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் தொடர்பான அமைச்சின் செயலாளர் திரு. தயானந்த ரத்னாயக அவர்கள், 2020.05.27 ஆந் திகதி முதல், ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அதிகாரபூர்வ அங்கத்தவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

2. *ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க நூலக சேவைகள் மன்றம் நியதிச் சட்டத்தின் 13.5 ஆம் பிரிவிற்கமைய, ஊவா மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் சமாதானமும், கல்வி (தமிழ் பாடசாலைகள் தவிர்ந்த), மாகாண உள்ளூராட்சி, காணி, மின்சக்தியும் வலுசக்தியும், நிர்மாணத்துறை, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி தொடர்பான அமைச்சின் செயலாளர் திருமதி ஜீ. ஏ. எம். எஸ். பீ. அபன்வல அவர்கள், 2020.03.11 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில், ஊவா மாகாண நூலக சேவைகள் மன்றத்தின் நிரந்தரத் தவிசாளர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை, தற்காலிக அடிப்படையில் தவிசாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

1A - PG 5055 — 67 (2020/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3. ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஊவா மாகாண வீட்டு வாடகை நியதிச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீட்டு வாடகைச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம், பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் தரத்தைச் சேர்ந்த திருமதி ஈ. பீ. ஏ. ஸ்ரீயாகாந்தி அவர்கள், உடனடியாக செயற்படும் வகையில் 2020.02.24 ஆந் திகதி முதல் ஊவா மாகாண வீட்டு வாடகை சபையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

*உயர் சட்டத்தரணி* **ராஜா கொல்லுரே,**
*ஊவா மாகாண ஆளுநர்.*

*ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்,*
*இராஜ வீதி,*
*பதுளை.*
*2020, யூலை 06.*

*07-706*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.